# செயற்கை முறை கருவூட்டல் கால பராமரிப்பு

- ஒவ்வொரு பசுவும் சினையாகாத நிலையில் 18-21 நாட்களுக்கு ஒரு முறையும், எருமை 21-24 நாட்களுக்கு ஒரு முறையும் பருவத்திற்கு வரும்.
- பொதுவாக பசுக்கள் இரவு நேரங்களில் பருவத்திற்கு வரும். எனவே காலையில் பசுக்களை கவனித்து வந்தால் பருவத்தை எளிதில் கண்டறியலாம்.
- மாடுகளை அடித்து விரட்டியும், நெரிசல் மிகுந்த நேரத்திலும் ஓட்டிச் செல்லுதல் கூடாது.
- சினை ஊசி போடும் அரை மணி நேரத்திற்கு முன்பும் பின்பும் அமைதியான சூழலில் இருத்தல் வேண்டும்.
- கருவூட்டல் செய்த பிறகு குறைந்தது 5 நிமிடம் கருவூட்டல் செய்த இடத்தில் அமைதியாக இருக்க செய்து பின்பு பிடித்து செல்லுதல் வேண்டும்.
- கருவூட்டல் செய்த பின்பு எப்போதும் வழக்கமாக கொடுக்கப்படும் தீவனம், நீர் போன்றவற்றை வழங்க வேண்டும் குறைத்தல் கூடாது.
- கருவூட்டல் செய்த மாடுகளை இயற்கைக்கு மாறாக படுக்கவிடாமலோ அல்லது வேறு வகையிலோ சிரமம் கொடுக்கக் கூடாது.
- காலையில் சினைபருவ அறிகுறிகள் தோன்றினால் மாலையிலும், மாலையில் தோன்றினால் மறுநாள் காலையிலும் கருவூட்டல் செய்ய வேண்டும்.
- பருவத்திற்கு வந்த மாடுகளை 8-12 மணி நேரத்திற்குள் சினை ஊசி போடுதல் நல்லது.
- சினை ஊசி போட்டு 80-90 நாட்களில் சினை பரிசோதனை கட்டாயம் செய்ய வேண்டும்.
- கன்று ஈன்ற 60-90 நாட்களில் அடுத்த சினை ஊசி போட வேண்டும்.

## பருவத்தின் அறிகுறிகள்

- மாடு அமைதியற்று காணப்படும்.
- அடிக்கடி கத்துதல், சிறுநீர் கழித்தல், தீனி உண்ணாமை
- அருகில் உள்ள பிற மாடுகளின் மீது தாவும் அல்லது தன் மீது தாவ அனுமதிக்கும்
- முட்டையின் வெள்ளைக்கரு போன்ற திரவம் பிறப்பு உறுப்பிலிருந்து வழிந்து கொண்டிருக்கும் அல்லது வாலில் அடிப்பகுதியில் ஒட்டிக் கொண்டிருக்கும்.
- பால் அளவு குறையும்
- பிறப்புறுப்பின் உதடுகள் தடித்து உட்பகுதி சிவந்து பளபளப்புடன் காணப்படும்.